DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.205/2019 | Deposition of Witness for : PW5 |
| Name : அந்தோணி சவரிமுத்து | Father/Husband Name : அந்தோணி குருஸ் |
| Age : 49 | Village : பிரகாசபுரம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17 June 2025

Accused A1 present. A2 absent. Petiton U/s.317 Cr.PC filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பிரகாசபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தி, அ.சா.2 எனது சித்தப்பா ஆவார்கள். ஆஜர் 1 மற்றும் 2 வது எதிரியை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 01.07.2018 ஆம் தேதி மாலை 4.45 மணியளவில், நான் பக்கத்து தெருவில் இருந்தேன். அப்பொழுது சத்தம் கேட்டு அங்கு வந்தேன். அப்போது 1 மற்றும் 2 வது எதிரிகள் அங்கு வந்து அ.சா.2 ஐ அடித்தார்கள். பின்பு எதிரிகள் அ.சா.1 மற்றும் 2 ஐப் பார்த்து வெட்டாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்கள். சம்பவத்தின் போது நானும் அருகில் இருந்தவர்களும் சத்தம் போட்டு விலக்கிவிட்டோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. புகார்தாரர் அ.சா.1 எனது சித்தி என்றால் சரிதான். 2 வது எதிரி ஜெகன் சாரோனின் ரோஜா என்ற பெயரில் திசையன்விளையில் சபை நடத்தி வருகிறார் என்ற விபரமும், அவர் பாதிரியார் என்ற விபரங்கள் குறித்து எனக்கு தெரியாது. இதை வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி ஜெகன் மற்றும் அ.சா.1 ஆகியோர்களுக்கு இடையே முன்விரோதம் இருந்ததா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என்னுடைய வீடு RC கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக கூறும் இடத்திலிருந்து எத்தனை தெரு தள்ளி என்னுடைய வீடு உள்ளது என்றால் ஒரு தெரு தள்ளி வீடு உள்ளது.

3. வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சத்தம் கேட்டதால் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது எதிரிகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கே எதிரிக்கும் அ.சா.1 மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. இதை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. அ.சா.ஆ.1 புகார் மனு கொடுத்த பின்பு போலீசார் என்னை வந்து விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.1 புகார்தாரார் என்னுடைய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.06.17 17:59:10 +0530

**சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.06.17 17:59:18 +0530

Judicial Magistrate, Sathankulam.